**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 93** **நாள்: 10.07.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி சொத்துவரி சம்பந்தப்பட்ட நிலுவையில் உள்ள வழக்குகளை சமரசம் மூலம் தீர்வு காண தேசிய மக்கள் அதாலத் நடைபெற உள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி சொத்துவரி சம்பந்தப்பட்ட வழக்குகளை சமரசம் மூலம் தீர்வு காண மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் வருகிற 14.07.2018 (சனிக்கிழமை) அன்று காலை 10.30 மணி முதல் **தேசிய மக்கள் அதாலத் (National Lok Adalat)** நடைபெற உள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியில் சொத்துவரி சம்மந்தமாக நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்து சமரசம் மூலம் தீர்வு காண விரும்பும் பொதுமக்கள் 12.07.2018 மற்றும் 13.07.2018 ஆகிய நாட்களில் ரிப்பன் மாளிகையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய் துறை வருவாய் அலுவலரை (Revenue Officer) அணுகலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**